# கொழும்புப் பல்கலைக்கழகம்
## கல்விப்பீடம்

## கல்வி முதுமாணிக் கற்கைநெறி (பொது) முழுநேரம்
## தமிழ் மொழிமூலம் 2020/2021

இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பின்வரும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கல்விமாணிப்பட்டம்/ கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பட்டம்.

**வகை 1:**

கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட முதலாம் வகுப்புச் சித்தி அல்லது இரண்டாம் வகுப்பின் மேற்பிரிவுச் சித்தியுடனான கல்விமாணிப்பட்டம்

**அல்லது**

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சிறப்பு அல்லது பொதுப் பட்டத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதிவிசேடசித்தி (Distinction Pass) அல்லது விசேடசித்தி (Merit Pass) யுடன் கூடிய பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பட்டம்.

மேலே குறிப்பிடப்பட்ட பட்டங்களுக்குச் சமனானதாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வேறு தகைமைகள்

**வகை 2:**

கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கல்விமாணிப்பட்டம்

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முதற்பட்டத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பட்டம்

- விண்ணப்பதாரிகள் மேற்படி தகைமைகளுடன் விண்ணப்ப முடிவுத் திகதியில் மூன்று வருட சேவையை கட்டாயமாகப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.
- தகைமையுடைய விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்
- விண்ணப்பதாரிகள் விண்ணப்படிவத்தைச் சமர்ப்பிக்கும்போது அவர்கள் பணிபுரியும் நிறுவனத் தலைவர்களிடமிருந்து அனுமதிக் கையொப்பத்தைப் பெற்றிருத்தல் கட்டாயமானது
- கற்கைநெறிக்கட்டணம் 90,000.00

**விண்ணப்பிக்கும் முறை**

கற்கைநெறி தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தை http://edu.cmb.ac.lk என்ற இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பக் கட்டணமான 1000.00 வினை மக்கள் வங்கியின் (திம்பிரிகசாய கிளை) **206207800016** என்ற கணக்கிலக்கத்துக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுடன். விண்ணப்பங்களை Course Coordinator, Master of Education (Full Time) Course, Faculty of Education, University of Colombo, Colombo 03. என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியின் பெயர் மற்றும் வருடத்தைத் தெளிவாகக் குறிப்படவும்

விண்ணப்ப முடிவுத் திகதி **20.06.2020**

மேலதிக விபரங்களுக்கு **011-2588812**

பதிவாளர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்,
கொழும்பு 03.
18.05.2020